மொத்தமாக கொள்வனவு
செய்யும் வியாபாரிகளுக்கு
விசேட விலைக்கழிவு
வழங்கும் நிறுவனம்
ஜெயா
அழகு சாதன மாளிகை,
177A, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
(29495)

பக்கங்கள் நான்கு

# உதயன்

விலை ரூபா 5-00

வியாபாரிகளே!
அழகுசாதன, இமிற்ரேசன்,
எவர்சில்வர், பாடசாலைப்
பொருள்களை
மொத்தமாகக் கொள்வனவு
செய்ய:
ஜெயா
அழகு சாதன மாளிகை,
177A, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
(29495)

சுடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 மாசி 12 வியாழக்கிழமை (24 - 02 - 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 89

# மணலாற்றில் கவச வாகனம் மீது புலிகள் நேற்று றொக்கட் தாக்குதல்!

## படையினரின் குண்டுகளும் வெடித்தன 8 சிப்பாய்கள் பலி; அறுவர் படுகாயம்

**மணலாற்றில் நேற்றுக் காலை 8-30 மணியளவில் படையினரின் பவள் கவச வாகனம் ஒன்றின் மீது புலிகள் நடத்திய றொக்கட் தாக்குதலில் 8 படையினர் உயிரிழந்தனர்; அறுவர் படுகாயமடைந்தனர். படையினர் தம்முடன் கொண்டு வந்த ஆயுதங்கள் அனைத்தையும் புலிகள் கைப்பற்றினர்,**

இருபது படையினருடன் சென்ற இராணுவ வாகனமே விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு இலக்கானது.

விடுதலைப் புலிகள் ரொக்கட் மூலம் ஏவிய குண்டுகளில் ஒன்று இராணுவ வாகனத்தின் மீது விழுந்து வெடித்தது. அப்போது வாகனத்தில் வைக்கப்பட்டிருந்த வெடிப்பொருள்களும் வெடித்தன 8 படையினர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர்

கம்பிலியாவ முகாமில் இருந்து பராக்கிரமபுர முகாமுக்குப் படையினர் சென்று கொண்டிருந்தபோதே விடுதலைப் புலிகள் அவர்களைத் தாக்கினர்கள் என்று கொழும்பில் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் செழுனு குணதுங்கா தெரிவித்தார்.

விமானப்படை மற்றும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல் கெடுபிடிகள்

### வவுனியாவில் படை குவிப்பு

அடுத்த செவ்வாய் வவுனியாவில் நடைபெவிருக்கும் நகர சபைத் தேர்தலை ஒட்டி அங்கு ஆயிரக்கணக்கில் இராணுவமும், பொலீஸாரும் குவிக்கப்பட்டுள்ளதாக நேற்று யாழ் வந்து சேர்ந்த பயணிகள் தெரிவித்தனர்.

வீதிகள் தோறும் இராணுவத்தினரையே காணக் கூடியதாகவிருப்பதாகவும் —

வவுனியாவுக்குள் பிரவேசிக்கும் பயணிகள் மீது படையினர் கெடுபிடிகளை பிரயோகிப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர். (உ-3)

### மூதூர் பகுதியிலிருந்து தமிழர் வெளியேறத் தடை

திருமலை மாவட்டத்தின் மூதூர் பகுதியில் உள்ள தமிழர்கள் தமது இடங்களை விட்டு வெளியேற இராணுவத்தினர் தடை விதித்துள்ளனர்.

நேற்று முதல் உள்ளூராட்சித் தேர்தல் நடைபெறவுள்ள மார்ச் முதல் திகதிவரையான நாட்களுக்கு இத்தடை உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளது.

இதேவேளை —

மூதூர் பகுதியில் உள்ள கிராமங்கள் பலவும் நேற்றுக் காலை படையினரால் சுற்றிவளைக்கப்பட்டன.

பின்னர் வீடுகளில் இருந்த மக்கள் பலாத்காரமாக பாடசாலைகளுக்குக் கூட்டிச் செல்லப்பட்டனர். (உ5)

### வாக்களிப்பு நிலையங்களை சூழ பாதுகாப்பு வலயங்கள்

#### மட்டக்களப்பில் தீவிர ஏற்பாடு

மட்டக்களப்பு மாவட்டத்தில் தேர்தல் வாக்களிப்பு நடைபெறவுள்ள 160 நிலையங்களையும் சுற்றி பாதுகாப்பு வலயம் ஏற்படுத்தப்பட்டு பலத்த பாதுகாப்புச் செய்யப்பட்டு வருவதாக பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

நகருக்குள் வாகனங்களில் எடுத்துச் செல்லப்படும் பொருள்கள் கடுமையாகச் சோதனையிடப்படுகின்றன.

வாக்களிப்பு நிலையங்கள் அமைந்துள்ள இடத்தில் இருந்து 400 யார் தூரத்துக்கு அப்பாலேயே வாக்காளர்களும், வேட்பாளர்களும் தங்கள் வாகனங்களை நிறுத்தவேண்டும் என்றும் இராணுவத்தினர் பணித்துள்ளனர். (உ-எ-5)

### தேர்தல் பணியில் ஈடுபடும் ஊழியர்களுக்கு உயிராபத்து!

படையினரைக் கொண்டு அரசியல் வாதிகளுக்கு பாதுகாப்பு வழங்க முடியாத நிலையில் உள்ள ஓர் அரசாங்கம் எவ்வாறு கிழக்கில் நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலில் பணியாற்றும் ஊழியர்களுக்கு பாதுகாப்பு வழங்கப் போகிறது?

தேர்தல் திணைக்களத்தின் ஊழியர்களும் மற்றும் தேர்தல் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ள ஊழியர்களும் அவர்களின் குடும்பத்தினரும் இவ்வாறு கேள்வி எழுப்பியிருப்பதாக ''சண்டே ஐலண்ட்'' தெரிவித்திருக்கிறது.

கிழக்கு மாகாணத்தில் தேர்தல் பணிகளில் ஈடுபடுத்தப் படவுள்ள ஊழியர்களின் உயிர்களுக்கு பலத்த உயிராபத்து ஏற்பட்டிருப்பதாகவும் —

அவர்களுக்கு என குறைந்தது விசேட காப்புறுதித் திட்டம் ஒன்று கொண்டுவரப்பட வேண்டும் என்றும் தேர்தல் ஆணையாளர் அலுவலக அதிகாரிகள் அபிப்பிராயப்படுவதாகவும் அப் பத்திரிகை தெரிவித்திருக்கிறது. (உ-எ)

### அரச தரப்பு வன்முறை!

கிழக்கு மாகாணத்தில் உள்ளூராட்சித் தேர்தல் நெருங்கும் இவ்வேளையில் அரச ஆதரவாளர்கள் வன்முறையில் ஈடுபடுவது அதிகரித்திருப்பதாக நாடாளுமன்றத்தில் நேற்று தெரிவிக்கப்பட்டது.

இலக்கத் தகடுகள் இல்லாத வாகனங்களில் சிவில் உடை தரித்தவர்கள் வந்து, வீடுகளினுள் அத்துமீறிப் புகுந்து வீட்டில் உள்ளவர்களைப் பயமுறுத்தி தாக்குகின்றனர் என்று வன்னி மாவட்ட எம். பி ஜனாப். எஸ். எம். அபூபக்கர் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

சில அரச அதிகாரிகள் ஐ. தே க. அமைச்சர் ஒருவரின் அதிகாரத்தைப் பயன்படுத்தி பொது மக்களை நிர்ப்பந்தித்து வருவதாகவும் —

ஐ. தே. கவுக்கு வாக்களிக்காவிடின் ஜனசக்தி நிறுத்தப்படும் என்றும் பாதுகாப்பு நிறுத்தப்படும் என்றும் அச்சுறுத்தி வருவதாகவும் அவர் கூறினார். (உ-எ-6)

### கல்முனைப் பகுதியில் பெண் அதிரடிப் படையினர்

உள்ளூராட்சி தேர்தலை முன்னிட்டு கல்முனைப் பகுதியில் உள்ள விசேட அதிரடிப்படை முகாம்களில் பெண் அதிரடிப்படையினர் பெரும் எண்ணிக்கையில் நிறுத்தப்பட்டுள்ளனர். பெண்கள் மீதான சோதனை நடவடிக்கைகளை அவர்கள் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-5)

### ஐக்கிய தேசியக் கட்சியை இ. தொ. கா. ஆதரிக்காது

உள்ளூராட்சி தேர்தல்களில் ஐக்கிய தேசியக் கட்சியை ஆதரிப்பது இல்லையென்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தீர்மானித்துள்ளது.

''வடக்கு-கிழக்கு இணைப்புப் பற்றிய பிரச்சினைக்கு இன்னும் தீர்வு காணப்படாத நிலையில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஐக்கியதேசியக் கட்சிக்கு ஆதரவளிப்பது சாத்தியமான காரியம் அல்ல''—என்று அமைச்சரும் இ. தொ கா. தலைவருமான எஸ். தொண்டமான் தெரிவித்தார். (இ-எ)

## இரு வேங்கைகள் வீரச்சாவு

யாழ்ப்பாணம், பெப். 24

மணலாற்றில் நேற்றுக் காலை இடம்பெற்ற தாக்குதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் இரு வேங்கைகள் வீரச்சாவடைந்ததாகத் தெரியவந்தது. (உ-15)

## முச்சந்தி முரளி



அப்ப ... கிழக்கிலை தேர்தல் 'சூடு' பிடிக்கும் எண்டு சொல்லுங்கோ......!

## மன்னாரில் பணம் எடுத்துச் செல்ல படையினர் தடை!

மன்னார், பெப். 24

மன்னார் தீவில் இருந்து பெருநிலப்பரப்பிற்கு வருபவர்கள் 5 ஆயிரம் ரூபாவுக்கு மேல் எடுத்துச் செல்ல இராணுவத்தினர் தடைவிதித்துள்ளனராம். கூடுதலான பணத்தை எடுத்துச் செல்வதற்கு இராணுவத்திடம் அனுமதி பெற்றிருக்க வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-162)

## ஷெல் தாக்குதல்

யாழ்ப்பாணம். பெப். 24

மாதகல் இராணுவ முகாமில் இருந்து நேற்றுச் காலை 10 30 மணிக்கு பண்டத்தரிப்புப் பகுதியை நோக்கி ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இதேவேளை காரைநகர் இராணுவ முகாமில் இருந்தும் பொன்னாலைப் பகுதியை நோக்கிச் ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. (உ-15)

## தபால்கள் இறக்கப்படவில்லை

யாழ்ப்பாணம், பெப். 24

யாழ். மாவட்டத்துக்கான 438 தபால் பொதிகளுடன் தற்போது காங்கேசன் துறையில் தரித்து நிற்கும் ''கோமாரி'' கப்பல் நேற்று பருத்தித்துறைக்கு வரும் என எதிர்பார்க்கப்பட்டது ஆனால் கப்பல் பருத்தித்துறைக்கு வராததால் தபால் பொதிகளை இறக்குவதற்காக அங்குசென்ற தபாலக ஊழியர்கள் ஏமாற்றத்துடன் திரும்பினர். (உ-162)

## இயந்திரங்கள் அபகரிப்பு

கொழும்பு, பெப். 24

திருகோணமலை மீனவர்களுக்குச் சொந்தமான மீன்பிடி வள்ளங்களில் இருந்து மூன்று இயந்திரங்களை இனந்தெரியாதோர் ஆழ்கடலில் வைத்து அபகரித்துச் சென்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

## கொழும்பு மேயர் மீதான விசாரணை: சாட்சிகளாக ஜே. ஆர்.,கூரே இருவரையும் அழைக்க முடிவு

கொழும்பு, பெப் 24

கொழும்பு மாநகர மேயர் பதவியில் இருந்து இடைநிறுத்தஞ் செய்யப்பட்டுள்ள திரு ரட்ணசிறி ராஜபக்ஸ தமக்கு எதிரான ஒழுங்காற்று விசாரணையில் தமது தரப்பில் சாட்சியமளிப்பதற்காக முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா, அமைச்சர் சிறிசேன கூரே ஆகியோரை அழைக்கப்போவதாக அறிவித்திருக்கின்றார்.

கொழும்பு மாநகர சபையில் இடம்பெற்றுள்ளதாகக் கூறப்படும் முறைகேடுகள் பற்றி திரு ராஜபக்ஸா மீது குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

அவை பற்றி விசாரிப்பதற்காக முன்னாள் உயர் நீதிமன்ற நீதியரசர் ஓ எஸ் எம் செனவிரத்தினாவை மேல் மாகாண உள்ளூராட்சி அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா நியமித்து இருக்கின்றார்

திரு. ராஜபக்ஸாவுக்கு சாதகமாக சாட்சியமளிக்கவே ஜெயவர்த்தனாவும் சிறிசேன கூரேயும் அழைக்கப்படுவார்கள் என்று ராஜபக்ஸாவின் சட்டத்தரணி உபலி சேனரத்ன, தனிநபர் ஆணைக்குழுவிற்கு தெரியப்படுத்தி உள்ளார். (உ-எ)

## மருத்துவபீடத்திற்கான வெட்டுப்புள்ளி நிலை 266

யாழ்ப்பாணம், பெப். 24

1992 ஓகஸ்டில் நடைபெற்ற ஜி. சீ ஈ (உயர்தரப்) பரீட்சைக்குத் தோற்றியவர்களை பல்கலைக்கழகத்துக்கு அனுமதிப்பது தொடர்பான— யாழ் மாவட்ட மருத்துவ பீட — வெட்டுப் புள்ளியை 266 ஆக பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு நிர்ணயித்துள்ளது

கொழும்பு சென்று திரும்பிய யாழ் பல்கலைக்கழக பதிவாளர் திரு. கே. பரமேஸ்வரன் இத்தகவலைத் தெரிவித்தார்.

1992 ஓகஸ்டில் பரீட்சைக்குத் தோற்றியவர்களின் பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப்புள்ளியை நிர்ணயிக்கும் வேலைகள் தற்சமயம் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவால் மேற்கொள்

(3 ஆம் பக்கம் பார்க்க)

## இதுவரை நால்வர் பலி! வடமராட்சியில் வாந்திபேதி புலிகள் தடுப்பு நடவடிக்கை

வடமராட்சி வடக்குப் பிரதேசமான வல்வெட்டித்துறை, புலோலி மேற்குப் பகுதிகளில் இருந்து வாந்திபேதி நோயால் பாதிக்கப்பட்ட இருபது பேர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வாந்திபேதியால் பாதிக்கப்பட்ட தங்கவேலு வரதராசா (வயது 11) என்ற மாணவன் கடந்த வியாழனன்று மரணமானான் மற்றைய மூவர் தனியார் சிகிச்சையின் பின் உயிரிழந்துள்ளனர்.

இதனையடுத்து தடுப்பு நடவடிக்கைகளை விடுதலைப் புலிகளின் மருத்துவப் பிரிவு பொதுச் சுகாதாரப் பகுதியினர் உடனடியாக ஆரம்பித்தனர்

மேற்படி பாதிக்கப்பட்ட பகுதிகளில் கூடிய கவனம் செலுத்துமாறு பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரியைக் கேட்டுக் கொண்டவர்கள் —

கொதித்தாறிய நீரைக் குடிக்கும்படியும் தனிநபர் சுகாதாரத்தைப் பேணுமாறும் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். [உ]

## திருமலை சென்று மீண்டும் மாவுடன் 'ஹெந்தல' வரும்

யாழ்ப்பாணம், பெப். 24

மா இறக்கும் வேலைகளை முடித்துக் கொண்டு இன்று இங்கிருந்து புறப்படவுள்ள 'ஹெந்தல' கப்பல் மீண்டும் திருமலையில் இருந்து ஆயிரத்து 950 மெற்றிக் தொன் மாவினை ஏற்றிக் கொண்டு பருத்தித்துறைக்கு வரவுள்ளது

[illegible] மாணிக்கவாசகர் நேற்று இத்தகவலைத் தெரிவித்தார்.

இதேவேளை —

7 ஆயிரம் பரல் மண்ணெண்ணெயுடன் 'மாஹோ', கப்பல் அடுத்த சில தினங்களில் பருத்தித்துறை நோக்கிப் புறப்படும் என்று அரச அதிபருக்கு கொழும்பில் இருந்து அறிவிக்கப்பட்டுள்ளது (உ-5)

## குண்டுவீச்சில் சேதமுற்ற கிளிநொச்சி ஆஸ்பத்திரியை திருத்த நிதி, சிமெந்து, ஓடு

யாழ்ப்பாணம் பெப் 24

அண்மையில் கிளிநொச்சி வைத்தியசாலை மீது நடாத்தப்பட்ட விமானக்குண்டுவீச்சால் ஏற்பட்டுள்ள சேதங்களைத் திருத்துவதற்கென கிளிநொச்சி அரச அதிபர் 3 லட்சம் ரூபா நிதியை ஒதுக்கியுள்ளார். இதேசமயம் திருத்த வேலைகளுக்காக 50 பக்கெற் சிமெந்து மற்றும் 20 ஆயிரம் ஓடுகள் ஆகியவற்றை வவுனியா ஊடாக தருவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஐந்து நோயாளர் விடுதிகளுடன் முன்னர் இயங்கி வந்த கிளிநொச்சி வைத்தியசாலை

(3 ஆம் பக்கம் பார்க்க)

## மீன்பிடிப்பதற்கான தடை செவ்வாய் முதல் நீக்கம்

யாழ்ப்பாணம், பெப். 24

மீனவர்கள் மீன்பிடிப்பதற்கு விதிக்கப்பட்டிருந்த தடை உத்தரவு அடுத்த மாதம் முதல் திகதியிலிருந்து (செவ்வாய்க்கிழமை முதல்) நீக்கப்படவுள்ளதாக கொழும்பிலிருந்து யாழ் அரச அதிபருக்கு நேற்று அனுப்பப்பட்ட வானொலி செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது

இது தொடர்பான மேலதிக விபரங்கள் நேற்று இச்செய்தி அச்சுக்குப் போகும் வரை தெரியவரவில்லை. (உ 5)

## டி. பி., ரணிலின் பாதுகாப்பு: அமெரிக்கப் படையினர்!

கொழும்பு, பெப் 24

தேர்தல் நடைபெறும் தென் மாகாணத்திற்கு ஜனாதிபதி விஜேதுங்காவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவும் வரும் போது அவர்களுக்கு பாதுகாப்பு வழங்குவதற்காக அமெரிக்க இரகசிய பாதுகாப்புப் படையினர் தருவிக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

இத் தகவலை ''சண்டே ஐலண்ட்'' வெளியிட்டிருக்கிறது

ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் ஸ்ரீலங்காப் படையினரும் உளவுப் பிரிவினரும் தற்போது வழங்கி வரும் பாதுகாப்பு போதுமானதாக இல்லை என்பதே இதன் அர்த்தமாகிறது என்று ''சண்டே ஐலண்ட்'' கருத்து வெளியிட்டிருக்கிறது.

இதனிடையே -

தென் மாகாணத்திற்கு கடந்த மாதம் ஜனாதிபதி விஜயம் செய்த போது. அவருக்குப் பாதுகாப்பளிப்பதற்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கே வரும் பொருள்களுக்கு கப்பல் கட்டணம் அறவிடும் முடிவு தற்காலிக நிறுத்தம்

யாழ்ப்பாணம், பெப். 24

கப்பல் மூலம் யாழ் மாவட்டத்துக்கு அனுப்பப்படும் பொருள்களுக்கான கப்பல் கட்டணத்தை யாழ் அரச அதிபரே பொறுப்பேற்க வேண்டும் என எடுக்கப் பட்டிருந்த முடிவு தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருப்பதாக கொழும்பில் இருந்து யாழ். அரச அதிபருக்கு நேற்று அறிவிக்கப்பட்டுள்ளது

யாழ். மாவட்டத்துக்குரிய நிவாரணப் பொருள்கள் தவிர்ந்த கப்பல் மூலம் எடுத்து வரப்படும் ஏனைய பொருள்களுக்குரிய கட்டணத்தை அரச அதிபரே பொறுப்பேற்க வேண்டும் என அறிவிக்கப்பட்டிருந்ததும் —

அதன்படி பருத்தித்துறைக்கு வந்துசேர்ந்த 'ஹெந்தல' கப்பலில் எடுத்து வரப்பட்ட ஆயிரத்து 950 மெற்றிக் தொன் மாவுக்கான கப்பல் கட்டணத்தை அறவிடுவதற்காக மாவின் விற்பனை விலை கிலோ ஒன்றுக்கு 4 ரூபாவாக அதிகரிக்கப் பட்டிருப்பதும் தெரிந்தவையே.

கப்பல் கட்டணம் தொடர்

(3 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

### தேவை

ஆங்கில மொழிபெயர்ப்பாளர்கள் தேவை. திறமையும் அனுபவமும் உள்ள இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். வடமராட்சியில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது. கடித மூலம் தொடர்புகொள்ளவும். இல: 616, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (29548)

### மணமகன் தேவை

யாழ். இந்து 25 வயது நல்ல உயர் குடும்பத்தைச் சேர்ந்த சித்திரை 3ஆம் பாதம், செவ்வாய்க் குற்றமில்லாத, 5'-3'' உயரமுள்ள, வேம்படியில் படித்து A/L சித்தியடைந்த, Diploma [Computer Studies] செய்த அழகான பெண்ணுக்கு இலங்கையில் / வெளிநாட்டில் வேலைபார்க்கும் உயர்கல்வியுடைய மணமகன் தேவை. ஜாதகக்குறிப்பு, முழு விவரங்களுடன் கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். 613, மே/பா உதயன். (29500)

### காணவ்லலை

பொமனேரியன் நாய் சிவப்பு நிறம் 3 நாட்களாக காணவில்லை. கண்டவர்கள் கீழ்க்காணும் விலாசத்தில் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். 117, சிவப்பிரகாசம் வீதி, யாழ்ப்பாணம். (29592)

### நூலகர்களே!

உங்கள் நூலகங்களுக்குத் தேவையான மிகச் சிறந்த புத்தகங்களைத் தெரிவு செய்திட உடனே வாரீர். ஆனந்த்ஸ் புத்தக நிலையம், 21/B, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (6988)

### பாலர் ஆசிரியர் ஆகலாம்

கடைசித் தகைமை க.பொ.த. (சா/த) சனி, ஞாயிறு நேரில் கற்க முடியாதோர் தபால் வழியிலும் பயிலலாம். பாலர் ஆசிரியர் சங்கம், உயர்கலைக் கல்லூரி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (6994)

### வகுப்புகள்

கிற்றார், வயலின் புதிய வகுப்புகள் ஆரம்பம்! (ஞாயிறு) 27-2-94 (9-30 a.m.) இடம்: யாழோசை, ஆனைப்பந்தி. (29528)

### மணிக்கூடு திருத்தவேலை

சகல மணிக்கூடுகள், ரேடியோக்கள் உத்தரவாதத்துடன், திருத்திக் கொடுக்கப்படும். நல்ல நிலையிலுள்ள மணிக்கூடுகள் உதிரிப்பாகங்களுக்காக வாங்கப்படும். டில்கா வாச் அன் ரேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி, (வானவில் கூல்பார் அருகில்) யாழ்ப்பாணம் கிளை கண்டி வீதி, சாவகச்சேரி. (சி/7215)

## டிசம்பர் வரை இயங்க அனுமதி

கொழும்பு, பெப். 24

யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு, மன்னார், வவுனியா உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகங்கள் டிசம்பர் மாதத்துடன் மூடப்படவிருக்கின்றன.

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் இயங்கிய ஏனைய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலங்கள் மூடப்பட்டு விட்டதாயினும், மேற்படி நான்கு அலுவலகங்களின் வேலைகளும் பிரதேச செயலகங்களுக்கு கையளிக்கும் நடவடிக்கை இன்னும் முடிவடையாத காரணத்தால் அந்த அலுவலகங்கள் டிசம்பர் மாதம் வரை இயங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ-3)

## ஆஸ்திரேலிய உயர்கல்வி வாய்ப்புகள்

''ஆஸ்திரேலியாவில் உயர் கல்வி வாய்ப்புகள்'' எனும் விடயம் பற்றிய கருத்தரங்கு ஒன்று, இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ் பல்கலைக்கழக புவியியல் துறை விரிவுரை மண்டபம் இல. 2 இல் நடைபெறும்.

யாழ் பல்கலைக்கழக அரசியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஜெ கே நாதன் இப் பொருள் பற்றிக் கருத்துரை வழங்குவார்.

(க)

---

யா/வேலணை கிழக்கு மகா வித்தியாலய

## பழைய மாணவர் சங்க புனரமைப்புக் கூட்டம்

காலம்: 27 - 02 1994 ஞாயிற்றுக்கிழமை பி. ப 3-00மணி

இடம்: பாடசாலை மண்டபம், மனோகராத் தியேட்டர் அருகில், ''எக்சலம்'' கல்வி நிறுவனம்

மேற்படி மன்றத்தின் கூட்டத்திற்கு சகல பழைய மாணவர்களையும் சமுகம் கொடுக்கும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

சி. மாணிக்கவாசகர், அதிபர்.

24-02-1994 (29601)

---

அறவழிப் போராட்டக் குழுவின் 16ஆவது சேவை ஆண்டினை முன்னிட்டு
ஜேர்மன் ஜனநாயக குடியரசின் புனர்வாழ்வுத் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட

## அறவழிப் பயிலகம் திறப்பு விழா

எப்போது? **25 - 02 - 1994** வெள்ளி
எந்நேரம்? காலை 10 மணி
எங்கே? கண்டி சாலை கைதடி, நுணாவில்.

பிரதம விருந்தினர்:
திரு ஜோன் குட்கான்ட் அவர்கள் (மாவட்ட இணைப்பாளர், சிறுவர் பாதுப்பு நிதியம்)

முதன்மை விருந்தினர்:
திரு. பு சுந்தரம்பிள்ளை அவர்கள் (பிரதேசச் செயலர் - சாவகச்சேரி)
திரு சிவநாத் அவர்கள் (அரசியல் பொறுப்பாளர், தமிழீழ விடுதலைப்புலிகள், தென்மராட்சி)

சிறப்பு விருந்தினர்:
டாக்டர் கே. ரீ சிவபாதம் அவர்கள் (தலைவர், லயன்ஸ் கழகம், சாவகச்சேரி)
திரு அ. நல்லதம்பி அவர்கள் (உப தலைவர், ரீ. ஆர். ஆர். ஓ)
திரு த நவரத்தினராசா அவர்கள் (விசேட ஆணையாளர், நகராட்சி மன்றம், சாவகச்சேரி)

அன்பர்கள், ஆர்வலர்களை அன்புடன் அழைக்கின்றோம்.


- NVDAG -

க. ஜீவகதாஸ், செயலாளர்.

அறவழிப் போராட்டக் குழு, 29, கைதடி, நுணாவில், சாவகச்சேரி. [29566]

---

## ஓராண்டு நினைவலைகள்



அன்னை மடியில்: 06 - 12 - 1911

இறைவன் அடியில்: 24 - 02 - 1993

### நேசந்துப்பிள்ளை யோசப் நீக்கிலஸ்
(மனேச்சர்)

எம் உயிரே! எங்கள் பப்பா!
பப்பா பப்பா என்று பாசமுடன் அழைத்தோமே
ஆலமரமாய் எம் அனைவர்க்கும் நிழல் தந்தீர்
அழியா நினைவலைகள் ஆட்டிப்படைக்கிறதே
மறக்க முடியவில்லை மாறாது உம் நினைவு
நெஞ்சம் எல்லாம் நெருப்பாக
நினைவெல்லாம் உமக்காக
வெப்பத்தால் வெதும்புகிறோம்
வேதனையால் துடிக்கிறோம்
கனவிலும் நனவிலும் காணும் இடமெங்கும்
கண்ணிலும் கருத்திலும் நிறைந்திருக்கும் எங்கள் பப்பா
இன்னும் சிலகாலம் வாழ்ந்திருக்க வொட்டாது
காலனவன் கண்பட்டு கடுகதியாய் சென்றதென்ன
எம் அரசி கதிரைச் செல்வியின் பாதத்தில்
ஆனந்தமாய் அமர்ந்திருக்க
அல்லும் பகலும் ஆண்டவனை வேண்டுகின்றோம்.

துன்பத்தில் துவளும்;
மனைவி (சிசிலியா), பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்கள்

'றைமோட்வில்லா' சில்லாலை, பண்டத்தரிப்பு.

---

## கைச்சங்கிலி

சுன்னாகத்தில் இயங்கும் ஒலிம்பியா விவசாய சேவை ஸ்தாபன உரிமையாளர் க. பன்னிருகரன் என்பவரால், வீதியில் இருந்து பெறுமதிமிக்க தங்கப் பவுண் கைச்சங்கிலி ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. இதைக் கைதவற விட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

**ஒலிம்பியா விவசாய சேவை**
ஸ்ரேசன் றோட், சுன்னாகம்.

(29604)

---

துணைவேந்தர் பேராசிரியர்
## அ. துரைராசா
அவர்களின்
## பிரியாவிடை வைபவம்



துணைவேந்தர் அ. துரைராசா அவர்களின் சேவையைப் பாராட்டி
துணைவேந்தர் அவர்களுக்கு
யாழ். பல்கலைக் கழக விளையாட்டு ஆலோசனை சபையும் விளையாட்டு அவையும் இணைந்து

இன்று **24-02-1994** (வியாழக்கிழமை) மாலை 4 00 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலை அரங்கில் பிரியாவிடை வைபவம் ஒன்றை நடத்துகின்றன.

இவ்வைபவத்தில் சிறப்பு நிகழ்ச்சியாக SHOTOKAN KARATE INTERNATIONAL FEDERATION (NORTHERN PROVINCE) SENSEI S. தர்மராசா (2nd Dan Black Belt, Chief Instructor and Examiner) அவர்களால் நெறிப்படுத்தப்பட்ட கராத்தே கண்காட்சிகளும் இடம்பெறவுள்ளன.

இவ் வைபவத்தில் அனைவரையும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நித்தியா பாடசாலைச் சேவை, சிவன் வீதி, உரும்பிராய் (29600)

---

உள்ளூராட்சி எழுதுவினைஞர் சங்கம்

## சேவை நலம் பாராட்டு விழா

### திரு. த. நவரத்தினராசா
செயலாளர், நகரசபை, சாவகச்சேரி.

உள்ளூராட்சி எழுதுவினைஞர் சங்க முன்னாள் செயலாளராகவும், சாவகச்சேரி நகரசபைச் செயலாளராகவும் இருந்து இளைப்பாறிய திரு. த. நவரத்தினராசா அவர்கள் சேவையை பாராட்டிக் கௌரவிக்கும் ஒரு பாராட்டுவிழா யாழ். மாநகரசபை நாவலர் மண்டபத்தில் 25 - 02 - 1994 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 1. 30 மணிக்கு நடைபெறும்.

நகரசபை, பிரதேசசபைச் செயலாளர் சங்க உறுப்பினர்கள் தவறாது சமுகம் தந்து விழா சிறப்புற உதவுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

செ. சந்திரசேகரம், கௌரவ பொதுச் செயலாளர், மா. ந. ச. யாழ்.

அ பாலசுந்தரம், தலைவர். (சி/7270)

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு: 21 02 1908

உதிர்வு: 24 01 1994

### திருமதி காசிப்பிள்ளை செல்லம்மா

இன்று 24 - 02 - 1994 எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி கிரியைகளில் பங்கு கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

நினைவில் வாழும்: குடும்பத்தினர்

101, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். (29602)

---

யாழ்ப்பாண மாவட்டக் கூட்டுறவுச் சபை

## வருடாந்த பொதுக்கூட்ட அறிவித்தல்

இடம்: யாழ்ப்பாண மாவட்டக்-கூட்டுறவுச் சபை
காலம்: **27 - 02 - 1994** ஞாயிற்றுக்கிழமை
நேரம்: காலை 10 மணி
தலைவர்: திரு வை. செந்திநாதன் (தலைவர், யா. மா. கூ. சபை)

அனைத்து அங்கத்துவ சங்க பிரதிநிதிகளையும் தவறாது சமூகமளிக்குமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

செயலாளர், யா மா. கூ. சபை.

இல. 14, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

குறிப்பு: அனைத்து அங்கத்துவ சங்கங்களிற்கும் அழைப்புக் கடிதங்கள் பதிவு செய்யப்பட்ட முகவரிக்கு ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. கிடைக்காதவர்கள் தொடர்பு கொள்ளவும்.

[சி-7414]

---

## இலங்கை இளங்கலைஞர் மன்றத்தின் 14ஆவது இசை விழா

கலாமண்டபம், சட்டநாதர் வீதி, நல்லூர்.

### பதின்மூன்றாம் நாள் - இன்று

யாழ். நியூ ஹப்பி ரெக்ஸ்ற் ஆதரவில்

மாலை

**4-00 - 5-00** மங்கள இசை
கரவை கே. துரைராஜா குழுவினர்

**5-00 - 5-15** பாட்டு
எஸ் உதயராணி, எஸ். ஜெயராணி, எஸ். தமிழ்ச்செல்வி, பி. தர்சிகா, எஸ். ரஜனி, எஸ். ஸ்ரீகாயத்திரி, பி. கௌதமி, எஸ் ஜனாதினி, எஸ். பவதாரிணி, எஸ். லுஷாந்தி, ரி. சிவாஜினி — பாட்டு
சுகிர்தா — வயலின்
ஜஉட்ஜெமில்ராஜ் — மிருதங்கம்

**5-15 - 5-35** வீணை இசை
செந்தில்செல்வி செந்தில்நாதன், துஷ்யந்தி தில்லைச்சந்திரன், பாலகுமாரி துரைராஜா, ஆண்டாள் இராஜசிங்கம் — வீணை
எஸ். துரைராஜா — மிருதங்கம்

**5-50 - 6-15** பாட்டு
துளசி அரியரத்தினம் — பாட்டு
ஆர். எஸ். சேசமூர்த்தி — வயலின்
கே. ஆதவன் — மிருதங்கம்

**6-15 - 7-00** பாட்டு
கனகாம்பரி பத்மநாதன் — பாட்டு
சாந்தநாயகி சுப்ரமணியம் — வயலின்
கே. கண்ணதாஸன் — மிருதங்கம்

**7-00 - 7 30** மங்கள விளக்கேற்றல்
திரு. ச. கற்பகநாதன் (வெங்கடேஸ்வரா ஸ்ரோர்ஸ்)
திரு. கு. ரவிச்செல்வன்
என். யோகநாதன் (காரைநகர்)
திரு. எஸ். மனோகரன் (கலேவல)

அருள் உரை:
பிரம்மஸ்ரீ எஸ். சுந்தரேஸ்வர குருக்கள் (பிரதமகுரு பெருமாள் கோயில்)

தலைவர்:
திருமதி சி. இராமநாதன் (அதிபர், கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை)

பிரதம விருந்தினர்:
திருமதி பி. கணேசலிங்கம் (பிரதிக் கல்விப்பணிப்பாளர், சாவகச்சேரி)

சிறப்பு விருந்தினர்:
திருமதி ச. ஜெயராஜா (அதிபர், யா/இந்துமகளிர் கல்லூரி)

**7-30 - 8-30** இருவயலின் இசை
ஆர் ராதாகிருஷ்ணன், எஸ். கோபிதாஸ் — வயலின்
கே. கண்ணதாஸன் — மிருதங்கம்
சதா வேல்மாறன் — கடம்
எஸ். ராஜா — முகர்சிங்

**8-30 - 9 30** பரதநாட்டியம்
''நாட்டியக் கலா கேந்திரா மாணவிகள்''
தயாரிப்பு: கிரிஷாந்தி ரவீந்திரா, ரூபினி சேனாதிராஜா

கலா ரஸிகர்கள் அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்!

வாழ்த்துவோர்!
**''இராஜன் இசையகம்'' இசைக் கருவி திருத்தகம்,**
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

[இ-7811]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2, நாவலர் வீதி
யாழ்ப்பாணம்.

## தப்பிக் கொள்ளும் உபாயம்!

சந்தர்ப்பத்திற்கு ஏற்றாற்போல தமது கொள்கையையும், செயற்பாட்டையும் மொத்தத்தில் தம்மையும் மாற்றிக் கொள்பவர்கள் அரசியல்வாதிகள். தாங்கள் செய்யும் தவறுகளையும் சரியெனக் காட்டிக் கொண்டு, தமது முன்னேற்றத்துக்காக உழைப்பவர்கள் அவர்கள்.

இந்தக் குணாம்சத்தை இப்போது ஸ்ரீலங்காவின் படை உயர் அதிகாரிகளும் வரித்துக் கொள்ள முனைகிறார்கள்; வரித்துக் கொள்கிறார்கள். ஸ்ரீலங்காவைப் பொறுத்தவரையில் இப்போது படை உயர் அதிகாரிகளும் அரசியல் தலைவர்களுக்கு நிகரானவர்களாகி வருகிறார்கள். அதன் காரணமாகவோ என்னவோ அரசியல்வாதிகளின் பழக்கம் அவர்களையும் தொற்றிக் கொள்கிறது போலும்.

விமானப்படைத் தளதியாகப் பதவியேற்ற எயர் மார்ஷல் ஒலிவர் ரணசிங்கா தமது புதிய ஆசனத்தில் அமர்ந்ததுமே அசல் அரசியல்வாதியாகப் பேசியிருக்கிறார்! தாம் செய்யப்போகும் தவறுகளை அவை சரியானவையே என்று முன்னேற்பாடாகவே நிறுவ முனைகிறார்.

''முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்ட இலக்குகள் மீது நாம் விமானக் குண்டுத் தாக்குதல்களை நடத்துகிறோம். இராணுவப் புலனாய்வு வழங்கும் தகவல்களின் அடிப்படையிலேயே இது இடம் பெறுகிறது. ஆனால் இராணுவப் புலனாய்வும் பிழையாக முடியும். நாமும் தவறிழைக்க முடியும்'' — என்று கூறிய ஒலிவர் —

தாங்கள் இழைக்கக்கூடிய — வேண்டுமென்றே செய்துவிட்டுத் தவறாக நடந்துவிட்டது என்று கூறித் தப்பிக் கொள்ளும் — தவறுகளை சரி என்று நியாயப்படுத்துட் விதத்தில் —

இரண்டாவது உலக மகா யுத்தத்தின்போது பிரிட்டனிலும், ஜேர்மனியிலும் தேவாலயங்கள் மீது தவறுதலாகக் குண்டு வீசப்பட்டதை உதாரணம் காட்டுகிறார்!

வடக்கில் விமானப்படை நடத்தி வரும் குண்டுவீச்சுக்களில் நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பதும் பாடசாலைகள், ஆஸ்பத்திரிகள், வணக்கஸ்தலங்கள், சந்தைகள் போன்ற மக்கள் கூடும் பொது இடங்களிலும், மக்கள் குடியிருப்புக்கள் மீதுமே நடத்தப்படுகின்றன. அவ்வாறில்லையெனில் அவற்றுக்கு மிக அருகிலேயே குண்டுத் தாக்குதல் நடத்தப்படுகின்றன.

கடந்த 44 மாதங்களாக நடந்து வருவது இதுவே. ஆனால் விமானப்படையும் பாதுகாப்பு அமைச்சும் கூறுவது என்ன? முழுக்க முழுக்க விடுதலைப் புலிகளின் இலக்குகள் மீதே தாம் தாக்குதல் நடத்தியதாகவே அவை கூறின. பொதுமக்களைக் கொன்றுவிட்டு, விடுதலைப் புலிகளை ''அழித்து''விட்டதாக கணக்குக் காட்டுகிறார்கள். ஓரிரண்டு தாக்குதல்களை மட்டுமே தவறுதலாக நடத்தியதாக இதுவரை ஒப்புக்கொண்டிருக்கின்றனர்.

நிலைமை இப்படி இருக்கும் போது, புதிய விமானப் படைத் தளபதி தாம் செய்யப்போகும் தவறுகளை எல்லாம் நியாயப்படுத்த முனைகிறார். அதாவது தாக்குதல்கள் தவறுதலாக நடந்தால் அவை தவிர்க்கப்பட முடியாதவை என்று சரியாக்கப் பார்க்கிறார்.

மொத்தத்தில் அவர்கள் தொடர்ந்து 'தவறு'தலாகவே பொதுமக்கள் கூடும் இடங்கள் மீதும், அவர்களின் குடியிருப்புகள் மீதும் விமானத் தாக்குதல்கள் நடத்தப்போகிறார்கள் என்பதே அர்த்தமாகும். தாம் செய்யப்போகும் தவறுக்கு முன்னேற்பாடாகவே நியாயம் கற்பிக்கும் நிலைப்பாடு மிகவும் ஆபத்தானது.

வேண்டுமென்றே செய்துவிட்டு —

''மன்னிக்கவும் தவறுதலாக நடந்து விட்டது'' என்று கூறும் நிலைமை மாறி —

தவறுதலாக நடந்து விட்டது! அது தவிர்க்க முடியாதது என்ற புதிய தப்பிக் கொள்ளும் உபாயத்தை புதிய விமானப் படைத் தளபதி கைக்கொள்ளப் போகிறார்!

## இசை விழாவில் இன்று

இளங்கலைஞர் மன்ற இசை விழாவின் பதின்மூன்றாம் நாள் நிகழ்வுகள் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு மங்கள இசையுடன் ஆரம்பமாகும்.

இன்றைய விழாவில் துளசி அரியரத்தினம், கனகாம்பரி பத்மநாதன் ஆகியோரின் பாட்டும், ஆர். ராதாகிருஷ்ணன், எஸ். கோபிதாஸ் ஆகியோரின் இரு வயலினிசை, நாட்டியக் கலாகேந்திரா மாணவிகளின் பரதநாட்டியம் என்பனவும் இடம்பெறும்.

கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை அதிபர் திருமதி சி. இராமநாதன் தலைமையில் நடைபெறும் இன்றைய விழாவில் யாழ். இந்து மகளிர் கல்லூரி அதிபர் திருமதி ச. ஜெயராசா சிறப்பு விருந்தினராகக் கலந்துகொள்வார். (க-111)

## வெளிச்சம் இன்று வெளிவருகிறது

யாழ்ப்பாணம், பெப் 24

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தின் மாதாந்த வெளியீடான ''வெளிச்சம்'' கலை, இலக்கிய சமூக இதழின் பெப்ரவரி மாத இதழ் இன்று வெளிவருகின்றது.

இந்த இதழில் தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் வழங்கிய ''சுதந்திரம் இல்லையேல் வாழமுடியாது'' என்ற செய்தியும்—

மாலிகாவின் முன்பக்கக் கவிதையும்—

பிரம்மஞானி தொடராக எழுதிவரும் ''மனிதனும் வரலாறும்'' என்ற கட்டுரையும்—

இன்னும் புதுவை இரத்தினதுரை, இ. திருமாறன், சுபா, தூயவன், தொண்டையூர் தவாரகன் ஆகியோரின் கவிதைகளும்—

சித்திரன் சிவஞானசுந்தரம் அவர்களுடனான நேர்காணலும் மற்றும் பல அம்சங்களும் இடம்பெறுகின்றன.

## பிரியாவிடை வைபவம்

யாழ் பல்கலைக் கழக விளையாட்டு ஆலோசனை சபையும் விளையாட்டு அவையும் இணைந்து இன்று வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு யாழ். பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராசாவுக்கு பிரியாவிடை வைபவம் ஒன்றை நடத்துகின்றன. பிரியாவிடை வைபவம் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறும். (க-17)

# சென்ற வருட பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு திட்ட நிதி ரூ 148½ லட்சம்

## யாழ். மாவட்டத்துக்கு தற்போதுதான் கிடைத்தது

வலிகாமம் மேற்கு, பெப். 24

பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்ட 1993 ஆம் ஆண்டுக்கான நிதி 148 லட்சத்து 54 ஆயிரம் ரூபா தற்போது தான் யாழ். மாவட்டத்துக்கு கிடைத்துள்ளது.

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த பதவி விலகிய எட்டு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தொகுதி ரீதியாக ஒதுக்கப்பட்ட நிதி இதுவாகும்.

தற்போது கிடைத்துள்ள இந்நிதி மூலம் தொடர் வேலைகள் நிறைவேற்றப்படவுள்ளன.

நெடுந்தீவு பிரதேச செயலர் பிரிவுக்கு 11 லட்சத்து 78 ஆயிரத்து 500 ரூபாவும் —

வேலணை பிரதேச செயலர் பிரிவுக்கு 11 லட்சத்து 78 ஆயிரத்து 500 ரூபாவும் —

ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவுக்கு 11 லட்சத்து 78 ஆயிரத்து 500 ரூபாவும் —

சங்கானை பிரதேச செயலர் பிரிவுக்கு 11 லட்சத்து 78 ஆயிரத்து 500 ரூபாவும் —

உடுவில் பிரதேச செயலர் பிரிவுக்கு 11 லட்சத்து 78 ஆயிரத்து 500 ரூபாவும் —

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்கு 11 லட்சத்து 78 ஆயிரத்து 500 ரூபாவும் —

மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவுக்கு 11 லட்சத்து 78 ஆயிரத்து 500 ரூபாவும் —

நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்கு 11 லட்சத்து 78 ஆயிரத்து 500 ரூபாவும் —

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்கு 10 லட்சத்து 38 ஆயிரத்து 500 ரூபாவும் —

தெல்லிப்பளை பிரதேச செயலர் பிரிவுக்கு 10 லட்சத்து 78 ஆயிரத்து 500 ரூபாவும் —

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவுக்கு 2 லட்சத்து 98 ஆயிரத்து 500 ரூபாவும் —

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவுக்கு 10 லட்சத்து 53 ஆயிரத்து 500 ரூபாவும்—

சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவுக்கு 9 லட்சது 58 ஆயிரத்து 500 ரூபாவும் —

யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவுக்கு 9 லட்சத்து 98 ஆயிரத்து 500 ரூபாவும்— தொடர் வேலைகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. (இ-175)

## நோயாளர் நலன்புரிச்சேவை விஸ்தரிப்பு

யாழ்ப்பாணம், பெப், 24

யாழ். போதனாவைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்கம் தனது சேவையை விஸ்தரிக்க உள்ளது.

இதற்கு அமைய பராமரிப்பாளர்களை புதிதாகத் தெரிவு செய்ய அவர்களுக்கு பயிற்சி அளிப்பதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. (இ)

## கொழும்பு மாவட்ட அமைப்பாளர் செல்லச்சாமியின் இடத்துக்கு வேறொருவர் நியமனம்

கொழும்பு, பெப். 24

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் கொழும்பு மாவட்ட அமைப்பாளராக திரு. ராமையா யோகராஜா நியமிக்கப்பட்டிருக்கிறார்.

இதுவரை காலமும் ராஜாங்க அமைச்சரும் இ. தொ. கா. பொதுச் செயலாளருமான எம். எஸ். செல்லச்சாமியே மாவட்ட அமைப்பாளராக பணியாற்றி வந்தார்.

தொண்டமான் - செல்லச்சாமி மோதலின் பின்னரே இப்புதிய நியமனம் செய்யப்பட்டுள்ளது.

மேல் மாகாண சபை உறுப்பினரான திரு. யோகராஜா தொண்டமானின் ஆதரவாளர் ஆவார். (இ-எ)

## மக்கள் சீனக் குடியரசின் புலமை பரிசில் விண்ணப்பம்

கொழும்பு, பெப். 24

மக்கள் சீனக் குடியரசு அரசாங்கத்தால் வழங்கப்படும் பட்டப் படிப்புப் புலமைப் பரிசில்களுக்கு அபேட்சகர்களைத் தெரிவு செய்யும்பொருட்டு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விஞ்ஞானம், விவசாயம், பொருளாதார முகாமைத்துவம், பொறியியல், மருத்துவம் ஆகிய துறைகளில் கற்கைநெறியை மேற்கொள்ள விரும்புவோர் இதற்கு விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பங்களை இம்மாதம் 28ஆம் திகதிக்கு முன் உயர்கல்வி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பவேண்டும்.

இப் புலமைப் பரிசில் பற்றிய விவரங்களை யாழ்ப்பாணம் மின்சார நிலைய வீதி, இரண்டாம் ஒழுங்கை, இலக்கம் 15இல் உள்ள 'உதயன்' விளம்பரப் பணிமனையில் பார்வையிடலாம். [க]

# அமைதிப் பேச்சுகள், மாநாடுகள் இனப்பிரச்சினை தீர்வுக்கு உதவா

## அஸ்கிரிய பீடாதிபதி கூறுகிறார்

கொழும்பு, பெப். 24

வடக்கு - கிழக்கு யுத்தத்துக்கு முடிவு காணப்பட வேண்டும். யாராவது ஒருவர் இதற்கு முடிவு காணும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட வேண்டும் ஆனால் அதற்கு அமைதிப் பேச்சுவார்த்தையும் மாநாடுகளும் உதவா.

அஸ்கிரிய பீடாதிபதி வண. பலிப்பான சந்தானந்த மகாநாயக்க தேரர் தம்மை சந்தித்து ஆசிபெற்ற விமானப் படையின் புதிய தளபதி எயர் மார்ஷல் ஒலிவர் ரணசிங்காவிடம் முன்கண்டவாறு தெரிவித்தார்.

முன்னர் இடம்பெற்ற பேச்சுகள் தோல்வியில் முடிவடைந்தன.

விடுதலைப் புலிகளிடம் இருந்து ஆயுதங்களைக் களைய இந்திய அமைதிகாக்கும் படையினராலும் முடியாது போயிற்று.

இந்த நெருக்கடிக்கு தீர்வு காணுவதற்கு உள்ள ஒரே ஒரு வழி பயங்கரவாதத்தை எல்லா வழிகளாலும் ஒடுக்கி சமூகங்களிடையே இன சௌஜன்யத்தையும் சமாதானத்தையும் ஏற்படுத்துவதேயாகும் என்றும் அவர் கூறினார்.

பெரும்பான்மை இனச் சிங்களவர்களிலும் பார்க்க கூடுதல் சலுகைகளைத் தமிழர் அனுபவிக்கின்றனர். அரசுத் துறையில் முக்கிய பதவிகளை வகிக்கும் தமிழர், தனியார் துறையிலும் செல்வாக்குடன் விளங்குகின்றனர்.

வெளிநாடுகளில் உள்ள பல்கலைக்கழகங்களிலும் கல்வி வசதிபெறும் வாய்ப்பு தமிழருக்கு உண்டு. இவ்வாய்ப்பு சிங்களவருக்கு மறுக்கப்பட்டுள்ளது. இதற்குக் காரணம் சிங்களவருக்கு எதிராக தமிழர்களால் தவறான பிரசாரம் மேற்கொள்ளப்பட்டு வருவதேயாகும்.

யுத்தம் முடிவுக்கு வர வேண்டும் என்று விரும்புகின்றோம். ஆனால் முடிவு வருவதற்கான சாத்தியம் கண்ணுக்கு தெரிவதாக இல்லை.

இப்படி அஸ்கிரிய பீடாதிபதி மேலும் கூறினார்.

புதிய விமானப் படைத் தளபதி தமக்குரிய அதிகாரங்களை திடசித்தத்துடன் பயன்படுத்தி பயங்கரவாதத்தை ஒடுக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார். (இ-எ)

# கொழும்பு அதிமேற்றிராணியார் மீண்டும் யாழ்ப்பாணம் வருவார்

கொழும்பு, பெப். 24

நாட்டில் அமைதியை ஏற்படுத்தவே யாழ்ப்பாணம் சென்றேன். இன்னொரு தடவையும் யாழ். செல்ல எண்ணியுள்ளேன்.

—இவ்வாறு கூறினார் கொழும்பு அதிமேற்றிராணியார் வண. நிக்கலஸ் மார்க்கஸ் பெர்னாண்டோ.

நீர்கொழும்பு மாநகர மண்டபத்தில் நடைபெற்ற சுதந்திர தினக் கூட்டத்திற்கு தலைமை வகித்துப் பேசுகையிலேயே அவர் இப்படிச் சொன்னார்.

நாட்டிற்சமாதானம்தேவை. எப்படியாவது சமாதானம் காணப்பட வேண்டும். மத குருமார் என்ற வகையில் சமாதானத்தைக் கொண்டுவர வேண்டியது எமது கடமையாகும். வடபகுதியில் பயங்கர யுத்தம் நடக்கின்றது.

நாடு சுதந்திரம் அடைந்தாலும் அது பற்றி பெருமையாகக் கூறிக் கொள்ள நம்மிடம் ஒன்றுமே இல்லை— இவ்வாறு அவர் மேலும் கூறினார்.

இக்கூட்டத்தில் உரையாற்றிய நீர்கொழும்பு ஆங்குருக்காரமுள்ள விகாராதிபதி வண. மீகமுவ ஞானோபசதிஸ —

சமாதானத்துக்குரியவர்களே என்று சிறுபான்மை இனத்தை பெரும்பான்மை இனத்தவர் முழங்காலில் நின்று கெஞ்சிக் கேட்கும் நிலை ஏற்பட்டிருப்பது துரதிஷ்டவசமானதாகும் — என்றார்

''பிரச்சினைகளை ஏற்படுத்துகின்ற சிறுபான்மை இனக் குழுக்கள் சமாதானம் கோரி பெரும்பான்மை இனத்துக்கு விண்ணப்பிக்கவில்லை.

''ஆனால் கொழும்பு அதிமேற்றிராணியார் சமாதானம் வேண்டி யாழ்ப்பாணம் சென்றார் என அறிகின்றோம்''— இவ்வாறு அவர் மேலும் கூறினார். (உ-எ)

## தென்னிலங்கையில் மற்றொரு பிரபா!

### அமரசிறி தொடங்கொட சபதம்

கொழும்பு, பெப். 24

எதிர்வரும் தேர்தலில் தென்மாகாண முதலமைச்சராகத் தாம் தெரிவு செய்யப்பட்டால் தென்னிலங்கையின் பிரபாகரனாக தாம் விளங்கப்போவதாக அமரசிறி தொடங்கொட சபதம் எடுத்துள்ளார்.

அமரசிறி தொடங்கொட கலைக்கப்பட்ட தென் மாகாண சபையின் முதலமைச்சராகப் பதவி வகித்தவர் என்பது தெரிந்ததே.

அமரசிறி தொடங்கொட பொதுமக்கள் முன்னணியின் சார்பில் தென்மாகாண முதலமைச்சர் பதவிக்குப் போட்டியிடுகிறார்.

அமரசிறி தொடங்கொடவின் கூற்றுச் சம்பந்தமாக பெந்தோட்டையில் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் அமைச்சர் அனுரா பண்டாரநாயக்கா கருத்துத் தெரிவித்தார்.

''இன்னொரு பிரபாகரன் உருவாகினால் அதனை இந்த நாடு தாங்கமாட்டாது'' என்று அனுரா பண்டாரநாயக்கா அப்போது கூறினார். [இ-எ]

## காணாமற்போன இரத்தினக்கல் இன்னும் கண்டு பிடிக்கப்படவில்லை

கொழும்பு, பெப். 24

ஜனாதிபதி மாளிகையில் இருந்து காணாமற்போனதாக அறிவிக்கப்பட்டுள்ள விலை மதிப்பிடற்கரிய இரத்தினக்கல் இன்னும் கண்டுபிடிக்கவில்லை என்றும்—

அதனை கண்டுபிடிக்கும் நடவடிக்கையில் இரகசியப் பொலிஸார் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர் என்றும் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

இதேவேளை—

''எனக்கு இந்த இரத்தினக்கல் அன்பளிப்பாகத் தரப்பட்டது. எனினும் நான் அதனை ஒரு போதும் பார்த்ததில்லை. ஜனாதிபதி செயலகத்திடம் அதனை ஒப்படைத்திருக்கக்கூடும்''— என்று முன்னாள் ஜனாதிபதி ஜெயவர்த்தனா கூறினார்.

''நான் பதவியில் இருந்து வெளியேற இருந்ததால் அது பற்றி அக்கறை காட்டவில்லை''— என்றும் அவர் தெரிவித்தார்.

1989 முதல் பிரேமதாஸா இறக்கும் வரை ஜனாதிபதி மாளிகையில் வசித்து வந்த ஹேமா பிரேமதாஸாவிடம் இருந்து இது குறித்து கருத்துப்பெற முடியவில்லை என்று சண்டேடைம்ஸ் தகவல் வெளியிட்டிருக்கிறது. (இ எ)

## அடுத்த செவ்வாய் வாக்களிப்பு

### தேர்தல் ஏற்பாடுகளுக்காக அதிகாரிகள் குழு கிழக்கிற்கு

கொழும்பு, பெப். 24

வரும் செவ்வாய்க்கிழமை கிழக்கு மற்றும் வவுனியாப் பகுதிகளில் இடம்பெறவிருக்கும் உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பான ஏற்பாடுகளை கவனிப்பதற்காக தேர்தல் ஆணையாளர், முப்படை மற்றும் பொலீஸ் உயர் அதிகாரிகளும் திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களுக்கு விஜயம் செய்தனர்.

தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டீ சில்வா, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஹமில்டன் வனசிங்ஹ, இராணுவத் தளபதி ஜெரி டீ சில்வா, பொலீஸ் மாஅதிபர் பிராங் டீ சில்வா கிழக்கு மாகாண இராணுவத் தளபதி லக்கி அல்கம ஆகியோர் நிலைமைகளை நேரில் அவதானித்தனர் என்றும் —

மட்டக்களப்பு மாவட்டச் செயலகத்தில் மாநாடு ஒன்று நடைபெற்றது என்றும் அறிவிக்கப்பட்டது. [உ எ 3]

## வல்வை வைத்தியசாலை சீர்கேடு குறித்து முறையீடு

வல்வெட்டித்துறை, பெப். 24

வல்வை அரசினர் வைத்தியசாலையில் சேவையாளர்கள், சிற்றூழியர்கள், அலுவலர்கள் உட்பட அநேகமானோர் உரிய நேரத்துக்கு கடமைக்கு வரத் தவறுவதால் வைத்தியசாலையின் சூழல் சுற்றாடல் சுகாதாரம், வார்ட்டு களைச் சுத்தம் செய்தல், மலசலகூடங்களைச் சுத்தம் செய்தல் ஆகியவை சரியாகப் பேணப்படுவதில்லை

வல்வெட்டித்துறை புனரமைப்புக் குழு மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

மேலும் உள் நோயாளிகளுக்கு சரியான முறையில் மருந்து வழங்கப்படுவதில்லை.

நோய் கூடிய நோயாளர்கள் வைத்தியசாலையின் உள் சிகிச்சைக்குச் சென்றால், வைத்தியசாலையில் இரண்டு சிகிச்சை நாற்காலிகள் இருந்தும் நோயாளர்கள்நடந்து உள்ளே செல்லுமாறு சிற்றூழியர்களால் பணிக்கப்படுகின்றார்கள்.

இதனால் நோயாளிகளுக்கு மரணமும்ஏற்பட இடமுண்டு.

விசேட கிளினிக், காலந்தாழ்த்தியே தொடங்குவது வழமையாகி விட்டது. இச் சீர்கேடுகள் வைத்தியப் பொறுப்பாளருக்கும், வைத்தியசாலை அபிவிருத்திச் சபைக்கும் சுட்டிக்காட்டப்பட்டும் எதுவித பயனுமில்லை.

இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது. [இ-155]

வீணாகும் தண்ணீர் - நம் வாழ் நாளில் கண்ணீர்

## தீர்த்தக்கேணி இன்று இறைப்பு

யாழ்ப்பாணம், பெப். 24

நாளை இடம்பெறும் மாசிமகம் மற்றும் வரவிருக்கும் மகாசிவராத்திரி ஆகியவற்றை ஒட்டி வில்லூன்றித் தீர்த்தக்கேணி இன்று இறைத்துப்பரவு செய்யப்படவிருக்கிறது. கேணியில் பெறுமதிமிக்க பொருள்களைத் தவறவிட்டவர்கள் நிர்வாகத்துடன் இன்று தொடர்பு கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளது. (உ-28)

## பாடசாலைகளில்

உடுப்பிட்டி மகளிர் கல்லூரியின் வருடாந்த விளையாட்டுப் போட்டி 26ஆம் திகதி சனிக்கிழமை கல்லூரி அதிபர் திருமதி எஸ். குட்டித்தம்பி தலைமையில் கல்லூரி மைதானத்தில் மாலை 2-00 மணிக்கு நடைபெறும்.

★ ★ ★

அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டிகள் இன்று வியாழக்கிழமை மாலை 2 மணிக்கு ஆரம்பமாகின்றன.

பாடசாலை அதிபர் திரு. பொ. நடராசா தலைமையில் நடைபெறும் போட்டியில் பிரதம விருந்தினராக நல்லூர் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. சி. புலேந்திரனும், சிறப்பு விருந்தினர்களாக ஓய்வு பெற்ற அதிபர் திரு க பாலசிங்கம், யாழ். மாவட்ட மாணவர் அமைப்பு துணைப் பொறுப்பாளர் திரு. சி. தமிழ்மறவன், அரியாலை கிராமியச் செயலக பொறுப்பாளர் திரு ம. செந்தூர் ஆகியோரும் கலந்து கொள்வார்கள். (க-17)

★ ★ ★

ஏழாலை மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அதிபர் திரு. சி. செல்லையா தலைமையில் நடைபெறும். பிரதம விருந்தினராக வடபிராந்திய பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. சி. வேலாயுதம் கலந்துகொள்வார். [க-89]

### கிளிநொச்சி----

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தற்போது மூன்று நோயாளர் விடுதிகளுடன் பெரும் எண்ணிக்கையிலான நோயாளர்களை சமாளிக்க வேண்டிய நிலையில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

நோயாளர்களை யாழ்ப்பாணம் எடுத்து வருவதில் உள்ள போக்குவரத்து பிரச்சினையால் கிளிநொச்சி வைத்தியசாலையில் நோயாளர்கள் நிரம்பி வழிவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. (உ-162)

### கப்பல்---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பான மேற்படி முடிவை மாற்றிக் கொள்ளுமாறு யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளரிடம் வானொலிச் செய்தி மூலம் கேட்டிருந்தார்.

இதேவேளை —

கொழும்பு சென்றுள்ள யாழ் செயலகத் திட்டப் பணிப்பாளர் திரு. செ. பத்மநாதனும் அங்கு இது விடயம் தொடர்பாக அத்தியாவசிய சேவைகள் பிரிவினருடனும், புனர்வாழ்வு அமைச்சு அதிகாரிகளுடனும் பேச்சு நடத்தியதாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

இந்நிலையில் —

கப்பல் கட்டணம் அறவிடப்படுவது தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருப்பதாக நேற்று மாலை யாழ் அரச அதிபருக்கு வானொலிச் செய்தி மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-5)

### மருத்துவ---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ளப்பட்டு வருவதாகவும் —

மருத்துவத் துறைக்கான வெட்டுப்புள்ளி வேலைகள் பூர்த்தியடைந்து விட்டதாகவும் —

பெரும்பாலும் அடுத்த மாத நடுப்பகுதியில் வெட்டுப்புள்ளி பற்றிய முழுவிபரத்தையும் வெளியிடக் கூடியதாக இருக்கும் என பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு வட்டாரங்கள் நம்பிக்கை வெளியிட்டதாகவும் அவர் மேலும் சொன்னார். [உ-3]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## YOGI HOME SCIENCE ACADEMY

Kachcheri Nallur Road, Nallur.

நடைபெறவிருக்கும் கேக் கண்காட்சியில் பங்கு கொள்ளவிருக்கும் எனது மாணவியர் அனைவரும் 27 - 02 - 94 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2-00மணிக்கு நடைபெறும் கருத்தரங்கிற்கு தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

— நிர்வாகி.

(சி 7264)

## மரண அறிவித்தல்கள்

### வைரமுத்து வெற்றிவேலு

இளவாலை, முள்ளானையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், இல: 98/2, மனிங்பிளேஸ் வெள்ளவத்தையை வசிப்பிடமாகக் கொண்டவருமான வைரமுத்து வெற்றிவேலு காலமானார். அன்னார் காலஞ்சென்ற வைரமுத்து தம்பதிகளின் புதல்வரும், வாலாம்பிகையின் அன்புக் கணவரும், ஸ்ரீசண்முகநாதன் (வழக்கறிஞர் U. K), விஜயாம்பிகை (இரசாயன பகுப்பாய்வாளர் திணைக்களம், கொழும்பு) அம்பிகைவேல் (கணக்காளர், ஆஸ்திரேலியா), சக்திவேல் (கொழும்பு பல்கலைக்கழகம்) ஆகியோரின் அருமைத் தந்தையும், கிருபா, தயாரட்ண (விரிவுரையாளர்), சுமுது ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 23-02-1994 இல் கனத்தை மயானத்தில் நடைபெற்றன. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

வை. செகரரஜசிங்கம் (மைத்துனர்)

சரியெற் வில்லா
சண்டிலிப்பாய். (29603)

### டாக்டர் V.S. ஜெகநாதன்

மானிப்பாய் ராஜகாரியர் வீதியைச்சேர்ந்த V.S. ஜெகநாதன் ஓய்வு பெற்ற டாக்டர் - அரசினர் வைத்தியசாலை இணுவில் 5-2-94 இல் கனடாவில் காலமானார்.

அன்னார் ஈஸ்வரதேவியின் அன்புக் கணவரும், லோகேஸ்வரன், ஜெகதீஸ்வரன், டினேஸ்குமார், ஸ்கந்தகுமார், நந்தகுமார் ஆகியோரின் அன்பு தந்தையும், காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் தம்பதியரின் புதல்வரும், காலஞ்சென்ற கணேசபிள்ளை (தாவடி) தம்பதியினரின் மருமகனும், காலஞ்சென்ற சோமஸ்கந்தன், விக்னராஜா, சிவநாதன், காலஞ்சென்ற வைத்தீஸ்வரன், கமலாதேவி, செந்தில்நாதன் ஆகியோரின் சகோதரரும், நித்தியானந்தன், லோகேஸ்வரி, விவேகானந்தன் (பிரான்ஸ்), மங்களேஸ்வரி, பத்மலோசனி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 10-2-94 இல் கனடாவில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தவல்:-
திருமதி. K. லோகநாதன்

பக்கஸ் வீதி,
மானிப்பாய். (29611)

### ஆறுமுகம் வைரிப்பிள்ளை

நயினாதிவு 7 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போது கொக்குவில் பிரம்படி லேனில் வசிப்பவருமான திருமதி ஆறுமுகம் வைரிப்பிள்ளை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகத்தின் அருமை மனைவியாரும், தனலெட்சுமி பதமநாதன், சிவபாதம், வேதாரணியம், இராசலெட்சுமி அவர்களின் அன்புத் தாயாரும், கணேசு, புசலேஸ்வரி, பிரேமாவதி, சிவநாதன் (இத்தாலி), ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24-02-94) எமதில்லத்தில் நடைபெற்று மாலை 4 மணிக்கு பூதவுடல் கொக்குவில் மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ஆ. சிவபாதம் (மகன்)

36/23 பிரம்படி லேன்,
கொக்குவில். (29607)

திருமதி
### தெய்வானைப்பிள்ளை மயில்வாகனம்

வேலணை கிழக்கைச் சேர்ந்த திருமதி தெய்வானைப்பிள்ளை மயில்வாகனம் 22 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்தார்.

இவர் பேரம்பலம் மயில்வாகனத்தின் அன்புத் துணைவியாரும் (வேலணை மேற்கைச் சேர்ந்த சந்தையா - பொன்னையாவின் அன்பு மகளும்) காலஞ்சென்ற பார்பதிப்பிள்ளை, நாகையா, தர்மலிங்கம், காலஞ்சென்ற முருகேசு, கதிரவேலாயுதப்பிள்ளை, பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், பேரின்பநாதன், (சோதி - நாதன் ரேடர்ஸ் நல்லூர்) வேலாயுதநாதன் (சிவம்), சிவகலை, ஞானகலை (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், விமலாதேவி சாந்தலஷ்மி, சந்திரசேகரம், மகேந்திரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், துவாரகா, ஜனார்த்தனன், மயூரன், கயலக்ஷன், கார்த்திகேயன், நீரஜா, நிரோஷன், வினோத், வளனி ஆகியோரின் பேர்த்தியும் காலஞ்சென்ற அன்னலக்ஷ்மி, காலஞ்சென்ற பராசக்தி, சண்முகரத்தினம், காலஞ்சென்ற சரஸ்வதி, சிவசுப்பிரமணியம், காலஞ்சென்ற சுப்பையா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24-2-1994) வியாழக்கிழமை காலை 10 மணியளவில் 50/14 செட்டித்தெரு வீதியில் உள்ள இல்லத்தில் நடைபெறும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பேரம்பலம் மயில்வாகனம்

50/14 செட்டித்தெரு,
நல்லூர். (29613)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (தனியார்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/3 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 24-02-1994 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

## டி.பி., ரனிலின்---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

காக காலிக்கும் மாத்தறைக்கும் இடையேயான ரயில் சேவை பல பணித்தியாலங்களாக இடை நிறுத்தம் செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொக்கலையில் சுதந்திர வர்த்தக நிலையம் ஒன்றை திறந்து வைக்க ஜனாதிபதி விஜேதுங்கா சென்றிருந்தார்.

மாத்தறை - காலி ரயில் பாதை கொக்கலை ஊடாகச் செல்வதைத் தொடர்ந்தே, ரயில் சேவையை ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவினர் இடை நிறுத்தி வைத்தனராம். பஸ்களும் அப்பகுதியால் செல்ல அனுமதிக்கப்படவில்லை. (உ-எ)

## மணலாற்றில்---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பீரங்கிப்படை ஆகியவற்றின் உதவியுடன் அரச படைகள் எதிர்த் தாக்குதல் நடத்தின என்றும் அவர் சொன்னார்.

மணலாற்றுப் பகுதியில் கடந்த மூன்று நாட்களில் இரண்டாவது தடவையாக விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதல் இது என்று தெரிவிக்கப்பட்டது. (உ-எ-6-15)

கவிஞர் வை க. சிற்றம்பலம்
அவர்களின்

## நல்லூர் முருகன் இணைமணி மாலை
## நூல் வெளியீட்டு விழா

இடம்; நல்லை ஞானசம்பந்தர் ஆதீனம்
காலம்; 25 — 02 — 1994 வெள்ளி பி.ப. 2 30
தலைவர்; கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன் (தலைவர், இந்துநாகரிகத்துறை, யாழ். பல்கலைக்கழகம்)
ஆசியுரை: நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள்
வரவேற்புரை: திரு ஆறு. திருமுருகன் B. A.
வாழ்த்துரை: கம்பவாரிதி இ. ஜெயராஜ் (முதல்வர், கம்பன் கழகம்)
வெளியீட்டுரை: பேராசிரியர் அ சண்முகதாஸ் (தலைவர், தமிழ்த்துறை யாழ். பல்கலைக்கழகம்)
ஆய்வுரை: கவிஞர் சோ. பத்மநாதன் B. A. (உப அதிபர், பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை)

இணைமணி மாலை இசையாராதனை
சங்கீத பூஷணம் திரு S கணபதிப்பிள்ளை (பிரதிக்கல்விப் பணிப்பாளர்)

— விழாக்குழு

[7011]

## யாழ். இந்து பழைய மாணவர் சங்கம்

நடத்தும்

## முழுநிலா நாள் கருத்தரங்கு

காலம்: 25 - 02 - 1994 வெள்ளி மாலை 3-00 மணி
இடம்: கல்லூரி குமாரசாமி மண்டபம்

கருத்துரை 1
புவிநடுக்க அனர்த்தங்கள்
எஸ். ரி பி இராஜேஸ்வரன்
(முதநிலை விரிவுரையாளர், புவியியற்றுறை)

கருத்துரை 2
குறள் வழிச் சிந்தனைகள்
கலாநிதி நா. சுப்பிரமணியன்
(முதநிலை விரிவுரையாளர், தமிழ்த்துறை)

ஆர்வலர் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

குறிப்பு:
எமது சங்கத்தால் நடத்தப்பட்டு வந்த மேற்படி கருத்தரங்கத் தொடர் எதிர்வரும் முழுநிலா நாட்களில் தொடர்ந்து நடைபெறும் என்பதை தெரிவித்துக்கொள்கிறோம்.

செயலாளர்
யாழ். இந்து பழைய மாணவர் சங்கம்.

அன்பளிப்பு:
புங்குடுதீவு / நயினாதீவு ப.நோ.கூ. ச.
(சி-7263)

## யாழ் ரிட்ரவுண் றோட்டறக்ட் கழகம்

நடத்தும்

## 'கோலக் கண்காட்சி'

அத்துடன் கண்கவர் கைப்பணிப் பொருட்களின் விற்பனைக் கண்காட்சியும் இடம்பெறும்.

இடம்: யாழ் இந்து மகளிர் கல்லூரி
காலம்: 25 - 02 - 94 மாலை 2 மணி தொடக்கம் 5 மணி வரை
26 27 ஆம் திகதிகளில் காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை

அனுமதி: 10/- மட்டும்

விளம்பர அன்பளிப்பு:
லிங்கர் கூல் பார்
வெலிங்டன் சந்தி
(சி-7271)

## ஆலயங்களில்

பொன்னாலை ஸ்ரீ வரதராசப் பெருமாள் ஆலயத்தில் இன்று பிற்பகல் 3 மணிக்கு மகாலட்சுமி சுமங்கலிய தீப பூசையும் தொடர்ந்து லட்சார்ச்சனைப் பூர்த்தி திருவிழாவும் இடம்பெறும்.

★ ★ ★

இணுவில் சிவகாமி அம்மன் கோயில் லட்சார்ச்சனை பூர்த்தி சங்காபிஷேகம் நாளை வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறும். மாலை 6 மணிக்கு தீபபூஜை நடைபெறும். (க-89)

★ ★ ★

ஏழாலை மேற்கு ஏழுகோவிலடி சிவன் கோயில் நடேசர் அபிஷேகம் இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும். (க-45)

★ ★ ★

தென் மட்டுவில் வேரற்கேணி கந்தசுவாமி திருக்கோயிலில் நாளை வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு இளைப்பாறிய உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. ச. சின்னத்தம்பி சிறப்பு நற்சிந்தனை நிகழ்த்துவார்.

★ ★ ★

பொலிகண்டி கிழக்கு சல்லியம்பதி வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த இரதோற்சவம் இன்று வியாழக்கிழமை காலை 10-00 மணிக்கும், தீர்த்தத்திருவிழா நாளை காலை 7 மணிக்கும் நடைபெறும். [க-155]

★ ★ ★

பொலிகண்டி கிழக்கு கந்தவனக் கடவை ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி ஆலயம், வீரகத்தி விநாயகர் ஆலயம், பத்திரகாளி அம்பாள் ஆலயம் ஆகியவற்றின் மாசிமக தீர்த்த உற்சவம் நாளை வெள்ளிக்கிழமை காலை 7-00 மணிக்கு பொலிகண்டி சமுத்திரத்தில் நடைபெறும்.

★ ★ ★

கொழும்புத்துறை ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் கோவிலின் தேர்த் திருவிழா இன்று காலை 8 மணிக்கு நடைபெறும். நாளை காலை 9 மணிக்கு தீர்த்தத் திருவிழா இடம்பெறும். (உ-க-17-30)

★ ★ ★

அல்வாய் வேவிலந்தை ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோவிலில் கடந்த 15 ஆம் திகதி ஆரம்பமான இலட்சார்ச்சனை நாளை அதிகாலை அஷ்டோத்திர சங்காபிஷேகத்துடன் பூர்த்தியடையும்.

★ ★ ★

ஊரெழு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய இரதோற்சவம் இன்று காலை 10 மணிக்கு இடம்பெறும் நாளை காலை தீர்த்தோற்சவம் இடம்பெறும். (உ)

## இன்று

கோப்பாய் அரசினர் ஆசிரிய கலாசாலை இந்துமா மன்றத் தலைவர் திரு எம். பி. அருளானந்தன் தலைமையில் இன்றுவியாழன் காலை 9மணி முதல் மாலை 5 மணிவரை சைவசித்தாந்த விழா சிறப்பாக நடைபெறுகின்றது.

விழாவில் கலாசாலை அதிபர், மன்றக் காப்பாளர், யாழ் பல்கலைக்கழக இந்துநாகரிகத் துறைத் தலைவர் கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன், ஏழாலை ஞானபண்டிதர் கந்தையா, திருமதி மங்கையர்கரசி திருச்சிற்றம்பலம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு உரைநிகழ்த்துவார்கள்.

தொடர்ந்து கருத்தரங்கம், இசையரங்கம், நடன அரங்கம், வில்லுப்பாட்டு, நாடகம் ஆகிய நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன. (க)

★ ★ ★

வட்டுக்கோட்டை பொது நூலக வாசகர் வட்ட அறிவியல் கருத்தரங்கு வட்டுக்கோட்டை உப அலுவலக பொதுநூலக மண்டபத்தில் இன்று மாலை 4 மணிக்கு நடைபெறும்.

"இலங்கை அரசாங்கத்தின் குடாநாட்டிற்கான பொருளாதாரத் தடையும், குடாநாட்டின் பொருளாதார அபிவிருத்தியும்" என்ற தலைப்பில் யாழ்ப்பாணக் கல்லூரி ஆசிரியர் திரு. எஸ். குமாரவேல் கருத்துரை வழங்குவார்.

## விளையாட்டு நிகழ்வு

யாழ்ப்பாணம், பெப். 24

யாழ். மத்திய கல்லூரிக்கும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் இடையிலான கிரிக்கெட் போட்டி இன்று வியாழன் பிற்பகல் 2.15 மணிக்கு யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகும். போட்டி நாளை வெள்ளிக்கிழமையும் தொடர்ந்து நடைபெறும். (இ-20)

உ
திருநெல்வேலி
அருள் மிகு

## ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தான மாசிமக இலட்சார்ச்சனை பூர்த்தி உற்சவம்

காலம்: 25-02-94 வெள்ளிக்கிழமை
காலை: 7 மணிக்கு அஷ்டோத்தரசத சங்காபிசேகம்
காலை: 8 மணிக்கு இலட்சார்ச்சனை பூர்த்தி விழா ஆரம்பம்
காலை: 10 மணிக்கு அக்கினியில் எழுந்தருளிய அம்பாளுக்கு 64 உபசார பூஜை மஹா பூர்ணாகுதி, யாககும்ப அபிஷேகமும் விஷேட தீபாராதனை நடைபெற்று விபூதி பிரசாதம் வழங்கப்படும்.
மாலை: 4 30 மணிக்கு 108 தீபஜோதியில் விஷேட பூஜையும் சுவர்ணத்தினால் அம்பாளுக்கு நவசக்தி அர்ச்சனையும் இடம்பெற்று அம்பாள் வீதி உலா வருவாள்.

முக்கிய குறிப்பு:
காலை 10 மணி தொடக்கம் ஈழத்தின் பிரபல நாதஸ்வர, தவில் மேதைகளின் கச்சேரி இடம்பெறும்

[29612]

## மரண அறிவித்தல்கள்

### திருமதி ராசமலர் நவரட்ணம்
(மிருசுவில்)

திருமதி ராசமலர் நவரட்ணம் காலமானார்.

இவர் காலஞ்சென்ற றொபேட், தங்கமணி ஆகியோரின் அன்பு மகளும், அன்ரன்றெஜி. (இ.போ.ச -கிளிநொச்சி), பேசி நிக்கலஸ் (யாழ் பிறப்பு, இறப்பு பதிவு அலுவலகம்) ஜெறி (பிரான்ஸ்), றஞ்சி (கனடா) வதனி (இங்கிலாந்து), ரஜனி (கனடா), ஆகியோரின் அருமைத் தாயாரும், றெபோட் ராசசிங்கத்தின் அன்புச் சகோதரியும், புஷ்பம், மேசி (யாழ் பிறப்பு, இறப்பு பதிவு அலுவலகம்), மனோ (கனடா), ஆனந்தராசா (இங்கிலாந்து), பாஸ்கரன் (கனடா) ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

பூதவுடல் அன்னாரின் இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு இன்று பிற்பகல் 4 00 மணிக்கு மிருசுவில் புனித நீக்கிலஸ் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு கத்தோலிக்க சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி வேண்டுகிறோம்,

தகவல்:-
அன்ரன் றெஜி
பேசி நிக்கலஸ்
(மக்கள்)

ராஜஸ்தான்
மிருசுவில். (29614)

### திருமதி ருக்குமணி கணபதிப்பிள்ளை

ருக்குமணி 23-2-94 காலமாகிவிட்டார்.

அன்னார் கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும் மானிப்பாய் மருதடி விநாயகர் கோவில் தர்மகர்த்தா சுவாமிநாதனின் சிரேஷ்ட பேர்த்தியும் இராசகாரியர் செல்லாச்சி தம்பதிகளின் மகளும், காலஞ்சென்ற சுவாமிநாதன், இரத்தினநாதன், திருநேத்திரவல்லி, திருநாவுக்கரசு மற்றும் அன்னலட்சுமி, தெய்வேந்திரசிங்கம், சாரதாம்பாள், கனகராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும், சுரேந்திரபதி (ஓய்வூதியர், உருப்பிராய்), ஜெயமணி பத்மநாதன், கமலேந்திரன் (வசாவிளான் ம.ம.வி), ஞானேந்திரன் (பிரான்ஸ்), கருணேந்திரன் [கனடா] ஆகியோரின் அருமைத்தாயாரும், கமலாவதி, காலஞ்சென்ற ரி பி. பத்மநாதன், அன்னலட்சுமி, விக்னேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியாரும் திருமதி சந்திரலட்சுமி பாலசுப்பிரமணியம், முரளி, திருமதி பிரமீளா யோகராசலிங்கம், பிரேமானந், பத்மஜெயந். தாரணி, நிஷானி, சுபேந்திரா ஆகியோரின் அன்புப் பேத்தியும், ஜெயந்தா, யசோதா, ராகுலன், ஜசிந்தா ஆகியோரின் அருமை பூட்டியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் தாவடி வடக்கு, வன்னிய சிங்கம் வீதியில் இருக்கும் "சிவபதி" இல்லத்திலிருந்து இன்று பிற்பகல் 4 மணிக்கு தாவடி மயானத்திற்கு தகனக் கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
த. கணபதிப்பிள்ளை
(கணவன்),

'சிவபதி',
தாவடி வடக்கு (29615)

### செல்வி பாமதி சபாலிங்கம்

திருநெல்வேலி கிழக்கைப் பிறப்பிடமாகவும், கோப்பாய் வடக்கைச் வசிப்பிடமாகவும் கொண்ட பாமதி சபாலிங்கம் 21 - 02 - 94 அன்று காலமானார்.

அன்னார் சபாலிங்கம் (ஜேர்மனி - இந்திராதேவி ஆகியோரின் அன்புப் புதல்வியும், மைதிலி (ஜேர்மனி), மாலதி, சுமணலதா ஆகியோரின் அன்புச் சகோதரியும், இரத்தினசிங்கம் (நோர்வே), துரைராஜசிங்கம் (ஜேர்மனி), மகாலிங்கம், அன்னலிங்கம் (ஜேர்மனி), திருமதி சியாமளாதேவி - விக்னேஸ்வரன் ஆகியோரின் பெறாமகளும்—

மகாதேவன், பத்மதேவி, புவனேஸ்வரி, பொற்கொடி, இராஜேஸ்வரி, காலஞ்சென்ற சண்முகநாதன், சற்குணம், சண்முகலிங்கம் ஆகியோரின் மருமகளும், காலஞ்சென்ற செல்லையா, பொன்னம்மா ஆகியோரின் பேர்த்தியுமாவர்.

இறுதிக்கிரியைகள் இன்று மாலை 4 மணிக்கு நடைபெற்று பூதவுடல் திருநெல்வேலி அம்மன் வீதி இல்லத்திலிருந்து திருநெல்வேலி இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்

உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
திருமதி . இந்திராதேவி சபாலிங்கம்

அம்மன் வீதி,
திருநெல்வேலி. (சி-29661)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org